Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2028 | புரட்டாதி 06 | (22 - 09 - 1992) | செவ்வாய்க்கிழமை | ஓசை 217

## இந்திய இலங்கை ஒப்பந்தம் இன்று செல்லுபடியாகாது

### ஜே. ஆர். தெரிவிப்பு

ராஜீவ் காந்தியுடன் தான் செய்துகொண்ட 1987 ஆம் ஆண்டு இந்தியா - சிறிலங்கா உடன்படிக்கை இன்று செல்லுபடியாகாது என்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார். சண்டே ஒப்சேர்பர் பத்திரிகைக்கு ஜே ஆர் வழங்கிய பிரத்தியேக பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார் இந்தியா - சிறிலங்கா உடன்படிக்கை செல்லுபடியாகாது என்றால் இணைப்புக்களும் செல்லுபடியாகாது. உடன்படிக்கையில் உள்ள (4 ஆம் பக்கம் பார்க்க)

## ( கிழக்கில் புலிகளின் துணிகர சாதனை )

# இரு தாக்குதல்களில் 32 இராணுவம் பலி

# கவசவண்டி நாசம்: பலபடையினர் காயம்

## வன்னிப் பிராந்தியமெங்கும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

தியாக வேள்வியில் ஆகுதி ஆகிய தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நிகழ்வின் ஆறாவது நாளாக நேற்று குடா நாட்டில் மட்டுமல்லவன்னிப் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கிளிநொச்சி நகரத்தில் பல இடங்கள சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. விசேடமாக அமைககபபட்ட பந்தல்களில் திலீபனின் திருவுருவப்படம் வைககபபடடு அதிகளவு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பகுதிகள்உட்பட பல்வேறு பகுதிகளில் அதிகளவு மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

வவுனியா மாவட்டத்தில் புளியம்குளம், கனகராயன் குளம், சேமமடு, மகிழங்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகள் உட்பட பல்வேறு இடங்களில் தியாகி திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு மலர் மாலைகள் சூட்டியும், மலர்கள் தூவியும் ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர் [க]

## தியாகி திலீபன் நினைவாக இன்றையசிரமதானபணிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகிலெப்டினன்ட்கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிழ்வின் ஓர் அங்கமாக நடைபெற்றுவரும் சிரமதானப் பணிகளில் இன்று,

சோனகத்தெரு மக்களால் சோனகததெருவில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

உடுவில் வட்டப் பிரிவில் இணுவில் சந்தியிலிருந்து கந்தசுவாமி கோவிலடி வழியாக அண்ணாகோப்பி பின்வீதியாகச் சென்று துரைவீதியால் ஏறும் பிரதான பாதை சிரமதானமூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

கோப்பாய் வட்டப் பிரிவில் ஆவரங்கால் கண்டிக்காடு நேருவீதியும் அரசினர் தமிழ்க் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மின்வேக அதிரடி திருமலையில் கண்ணிவெடி தாக்குதல்

(நமது நிருபர்)

கிழக்கில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு வேறு துணிகரத் தாக்குதல்களில் குறைந்தது 32 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதல்களில் ஒன்று மட்டக்களப்பு மாவட்டம் காயங்கேணி என்னும் இடத்தில் இடம் பெற்றது. இம் மின்வேக அதிரடித் தாக்குதலில் குறைந்தது 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். உதவிக்குவந்த கவச வாகனமும் நாசமாக்கப்பட்டது. இரண்டாவது தாக்குதல் திருமலை மாவட்டத்தில் இடம்பெற்றது. இக்கண்ணிவெடித் தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை 6 34 மணியளவில் காயங்கேணி இராணுவ முகாமிலிருந்து நாவலடி இராணுவ முகாப நோக்கி சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர்மீது காயங்கேணி முகாமிலிருந்து 300 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் மின்வேக அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இத்தாக்குதல் ஏழு நிமிட நேரம் மட்டுமே இடம் பெற்றது.

இத்தாக்குதலில் 23 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், இவ் அணியில் சென்ற இரண்டு இராணுவத்தினர் மட்டும் காயங்களுடன் தப்பி வந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவத்தினருக்கு உதவியாக நாவலடிச்சந்தி இராணுவ முகாமிலிருந்து மூன்று கவச வாகனங்கள் சகிதம் முன்னேறி வந்தனர். இவ் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளின் மற்றுமோர் அணியினர் நிலக்கண்ணி வெடித்தாக்குதலுடன் கூடிய தாக்குதலொன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலினால் ஒரு கவச வாகனம் சேதமடைந்தது. முன்னேற முயன்ற இராணுவத்தினர் தமது முயற்சிகளைக் கைவிட்டு அவ்விடத்திலேயே தரித்து நின்று விட்டனர்.

இத்தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 புலிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் காயங்கேணியில் நேற்று விடுதலைப்புலிகளால் மேற்கொள்

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காயங்கேணி என்னுமிடத்தில் சிறி

# அரசின் இராணுவத் திட்டம்

நிலைவு நிகழ்வின் ஆறாவது நாளாக நேற்று குடா நாட்டில் மட்டுமல்லவன்னிப் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கிளிநொச்சி நகரத்தில் பல இடங்கள சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. விசேடமாக அமைககபபட்ட பந்தல்களில் திலீபனின் திருவுருவப்படம் வைக்கபபடடு அதிகளவு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருபபு, ஒட்டிசுடடான், விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பகுதிகள்உட் புளியம்குளம், கனகராயன் குளம், சேமமடு, மகிழங்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகள் உட் கள் தூ வி யு ம் ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர் [க]

## தியாகி திலீபன் நினைவாக இன்றையசிரமதானபணிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகிலெப்டினன்ட்கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிழ்வின் ஓர் அங்கமாக நடைபெற்றுவரும் சிரமதானப் பணிகளில் இன்று,

சோனகத்தெரு மக்களால் சோனகததெருவில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

உடுவில் வட்டப் பிரிவில் இணுவில் சந்தியிலிருந்து கந்தசுவாமி கோவிலடி வழியாக அண்ணாகோப்பி பின்வீதியாகச் சென்று துரைவீதியால் ஏறும் பிரதான பாதை சிரமதானமூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

கோப்பாய் வட்டப் பிரிவில் ஆவரங்கால் கண்டிக்காடு நேருவீதியும் அரசினர் தமிழ்க்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இத்தாக்குதல்களில் ஒன்று மட்டக்களப்பு மாவட்டம் காயங்கேணி என்னும் இடத்தில் இடம் பெற்றது. இம் மின்வேக அதிரடித் தாக்குதலில் குறைந்தது 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். உதவிக்குவந்த கவச வாகனமும் நாசமாக்கப்பட்டது. இரண்டாவது தாக்குதல் திருமலை மாவட்டத்தில் இடம்பெற்றது. இக்கண்ணிவெடித் தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை 6 34 மணியளவில் காயங்கேணி இராணுவ முகாமிலிருந்து நாவலடி இராணுவ முகாம நோக்கி சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர்மீது காயங்கேணி முகாமிலிருந்து 300 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் மின்வேக அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இத்தாக்குதல் ஏழு நிமிட நேரம் மட்டுமே இடம் பெற்றது.

இத்தாக்குதலில் 23 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், இவ் அணியில் சென்ற இரண்டு இராணுவத்தினர் மட்டும் காயங்களுடன் தப்பி வந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவத்தினருக்கு உதவியாக நாவலடிச்சந்தி இராணுவ முகாமிலிருந்து மூன்று கவச வாகனங்கள் சகிதம் முன்னேறி வந்தனர். இவ் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளின் மற்றுமோர் அணியினர் நிலக்கண்ணி வெடித்தாக்குதலுடன் கூடிய தாக்குதலொன்றைமேற்கொண்டனர்.

இத்தாக்குதலினால் ஒரு கவச வாகனம் சேதமடைந்தது. முன்னேற முயன்ற இராணுவத்தினர் தமது முயற்சிகளைக் கைவிட்டு அவ்விடத்திலேயே தரித்து நின்று விட்டனர்.

இத்தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் இராணுவத் திட்டம் விடுதலைப் புலிகளால் சிதறடிப்பு

## படைத்துறை விமர்சகர்கள் கருத்து

[கொழும்பு]

வருட முடிவிற்குள் விடுதலைப் புலிகளை நசுக்கிவிடலாம் என்ற அரசின் நம்பிக்கையை விடுதலைப் புலிகள் சுக்கு நூறாக உடைத்து விடுவார்கள் என்பதை போர்க்களத்தின் அண்மைய நிலைவரங்கள் காட்டுகின்றன. இவ்வாறாக இராணுவ ஆய்வாளர்கள் சிலர் கருதுவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஐலண்ட் வார இதழ் ஓர் இராணுவ ஆய்வு விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளது.

டென்சில் கொப்பேகடுவ விஜய விமலரட்ணா போன்றோரின் இழப்பு வடபகுதிப் போர்முனையில் பலத்த பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது அண்மைய பின்னடைவுகள் இது கால வரையிலான இழப்புக்களில் மிகவும் மோசமானது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் மழைக்காலம் ஆரம்பமாகி விட்டால் படையினர் புதிதாகக் கொள்வனவு செய்த யுத்த டாங்கிகளைப் பயன்படுத்துவது சிக்கலானதாகிவிடும் என்றும், அதனால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் 13 பொலிசார் காவலரணிலிருந்து ஓட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் காவலுக்கு நின்ற சிறிலங்கா பொலிசாரில் 13 பேர் புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி தப்பி ஓடிவிட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. வவுனியா குடாகச்சக்கொடிய எனும் இடத்தில் காவலுக்கு என 400 சிறிலங்கா இராணுவத்தினரும் 30 பொலிசாரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் பதுளை மாவட்டத்தை சேர்ந்த 13 பொலிசாரே இவ்வாறு புலிகளின்

(4 ஆம பக்கம் பார்க்க)

## 3 புலிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் காயங்கேணியில் நேற்று விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதலில் மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

லெப்டினன்ட்
**சஞ்சிவன் [காமினி]**
குஞ்சித்தம்பி தயாபரன்
ஆரையம்பதி மட்டக்களப்பு

லெப்டினன்ட்
**இலக்கியன்**
குமாரசாமி கஜேந்திரகுமார்
கொம்மாந்துறை,
மட்டக்களப்பு

வீரவேங்கை
**கலாகரநாதன்**
இராசலிங்கம் விஜயகுமார்
கல்லிச்சை வடமுனை

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காயங்கேணி என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலைத் தொடர்ந்து பெருந்தொகையான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதன் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| ★ ஏ. கே. எல். எம் ஜீ. | | — | 02 |
| ★ 40 எம் எம். பிஸ்டல் | | — | 01 |
| ★ இதற்குரிய எறிகணைகள் | | — | 06 |
| ★ 60 எம். எம். பைபோட் மோட்டர் | | — | 01 |
| ★ இதற்குரிய எறிகணைகள் | | — | 10 |
| ★ ரி 56-2 ரக துப்பாக்கி | | — | 04 |
| ★ ரி 56-1 ரக துப்பாக்கி | | — | 11 |
| ★ ரி 81-1 ரக துப்பாக்கி | | — | 02 |
| ★ நடுத்தர ரவைகள் | | — | 304 |
| ★ லிங்குடன் ரவைகள் | | — | 332 |
| ★ ரம் மகசீன் | | — | 06 |
| ★ ரி 56 மகசீன் | | — | 42 |
| ★ ரி-81 மகசீன் | | — | 05 |
| ★ ஏ. கே. கோல்சர் | | — | 07 |
| ★ கிட்பாக் | | — | 02 |
| ★ சப்பாத்து | சோடி | — | 03 |
| ★ தொப்பி | | — | 01 |

## வீரச் சாவு



வீரவேங்கை வேலன்

19-09-92 அன்று வெற்றிலைக் கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர் மோதலில் வீரவேங்கை வேலன் (கிறீஸ்-வீணு கோபால் கிருஷ்ணகுமார் புலோலி தெற்கு புலோலி) வீரச்சாவு அடைந்தார்

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கிழக்குஐரோப்பிய நாடுகளிலிருந்து
# 450 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் அரசு கொள்வனவு

(கொழும்பு)

மலிவு விலையில் 450கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களை சிறிலங்கா அரசு முன்னாள் கம்யூனிஸ நாடு ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யவுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

இவ் ஆயுதக் கொள்வனவு பற்றி செய்தி வெளியிட்டுள்ள ஐலண்ட் வார இதழ் தகவலறிந்த வட்டாரங்களின் கூற்றுபடி, இந்தப் பெருமளவு ஆயுத வகைகளில், யுத்த டாங்கிகள், உலங்கு வானூர்திகள், கனரக வாசனங்கள், எறிகணை பொருத்தப்பட்ட படகுகள், என்பனவும் அடங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கிழக்கு மேற்கு ஆயுதக் குறைப்பு உடன்படிக்கையின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் காவலரண் தகர்ப்பு சிங்கள இராணுவம் சிதறி ஓட்டம்

[மணலாறு]

மணலாறு மாவட்டம் மண்கிண்டி இராணுவ முகாமிலிருந்து 500 யார் தொலைவில் அமைந்திருந்த காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 1. 10 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் இக் காவலரண் கைப்பற்றி முற்றாக அழிக்கப்பட்டது: இக் காவலரணில் இருந்த சிறிலங்காஇராணுவத்தினர் காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர்.

இராணுவத்திடமிருந்து பல வெடிப் பொருட்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இத்தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட இராணுவப் பொருட்களின் விபரம் வருமாறு:

நடுத்தரரவைகள் - 2050, லிங்குடன் ரவைகள் - 396, ரி-56 மகசீன் - 06, பெரிய ஜே ஆர். கைக்குண்டு - 10, ஜே ஆர். கைக்குண்டு - 01, ஏ கோல்சர் - 02, தலைக்கவசம்-06, சப்பாத்து -06 சோடி, மில்ரிபெல்ட் - 01, தண்ணீர் கான் கோல்சர் - 01.


மக்கள் அணியாய் திரள்கின்றார் எம் மண்ணை மீட்டே எழுகின்றார்
எங்கள் தலைவன் வழியதனில் தமிழீழம் காணப் போகின்றார்

சி/5084

-சுன்னாகம் வர்த்தக ஊழியர் சங்கம்.

## வரி விளம்பரம்

your watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare)
(சி-5044)

**மீண்டும் கிடைக்கிறது**

''கோப்பாய்-சிவம்'' எழுதிய ''சைவாலயக் கிரியைகள்'' புதிய பதிப்பு வெளிவந்துவிட்டது. எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும் முன்பு கிடைக்காமல் தேடியவர்கள் உடனே வாங்கிக் கொள்ளுங்கள். சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டன
(3200)

**முக்கிய அறிவித்தல்**

நீங்கள் பழுதுபார்ப்பதற்காகக் கொடுத்த உங்கள் பொருள்களை செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் எடுக்காவிடின் அப்பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. பற்றுச்சீட்டு இல்லாமல் பொருள் பெறமுடியாது. ஜீவிதா தொழில்நுட்பக் கூடம் ஓட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். (சி/ 5082)

**விற்பனை முகவர் தேவை**

யாழ் பஸ் நிலைய அருகாமையில் இயங்கும் தமிழ் தாய் புத்தகசாலைக்கு(19 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்) புத்தக விற்பனைக்கு ஆட்கள் தேவை கமிசன் வழங்கப்படும்.
(5092)

**தவறிவிட்டது**

ந. ஜெயராசா வேலணை கிழக்கு வேலணை என்பவரது அடையாள அட்டை 11 9.92 அன்றிரவு கிளாலி ஆலங்கேணி இறங்கு துறைக்கும், நல்லூருக்கும் இடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் கரன் வர்த்தக நிலையம்இரணமடு சந்தி, கிளிநொச்சி. என்ற முகவரியில் அல்லது 'ஸ்கைலைண்ஸ்'' மணிக்கூட்டு வீதி. யாழ். என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (3207)

## அரச இலட்சினை பொறிக்க உத்தரவு

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மடியில் விற்றிட
04
—
02
—
1969



மனங்கள் போற்றிட
22
—
09
—
1990

**கடற்புலி மேஜர் வின்சன் - மப்பான்**

[நவரட்ணம் வசந்தன்]

நிலா முகம் எழுந்துலா வருமோ!

வங்கக் கடலும் வஞ்சனை செய்ததாய் - வளர்
தங்கத் திருமகனை தன்னகம் வைத்ததே!
பொங்கும் மனதுகள் எங்கும் எழுந்ததாய் - புலி
மைந்தன் வரவினை தேடி அலையுதே!
அங்கம் நலிவுற அனல் இடை புழு அதாய் - ஆகியே
துயர் உற ஆவிகள் துடிக்குதே!
எங்கும், எதனிலும் எழில் முகம் இருப்பதாய் -
எண்ணியே அனுதினம் ஏ - மாற்றமும் கொள்ளுதே!


நெஞ்சமும் மலருமோ! நீளும் இருளும் விலகுமோ!
நிலா - முகம் எழுந்திங்கு உலாவும் வருமோ!
பிஞ்சுகள் மறக்குமோ! பேரன்பும் மறையுமோ!
பண்புகள் வளர்த்தவன் எமை பாதியில் பிரிவதோ!
தஞ்சமும் என்றவன் தனி வழி செல்வதோ
தாளா - துயர்தனில் நாங்களும் தவிப்பதோ!
வெஞ்சமர் தொடர்வதோ! வஞ்சகம் தழைப்பதோ
வென்றொரு முடிதரிக்கையில் - உன் நிழல் இங்கு
இல்லையோ!

மேஜர் வின்சன் வீதி,
வல்வெட்டித்துறை.
22- 09- 1992

இங்ஙனம்
உன் நினைவு என்றும்நீங்கிடா
குடும்பத்தவர், உற்றார்,
நண்பர்கள்.

(3206)

## ஆண்டு ஒன்று நினைவு



# ஏற்புத்தடுப்பு ஊசிக்கு இராணுவம் தடை விதிப்பு

கர்ப்பிணிப்பெண்களுக்கான ஏற்புத் தடுப்பூசிவடபகுதிக்கு கொண்டு செல்வதற்குச் சிறிலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது.

தாண்டிக்குளம் சோதனை முகாம் ஊடாக வடபகுதி நோக்கி இதை எடுத்துச்செல்லவே இராணுவம் தடைவிதித்துள்ளது. இதனால் வன்னிப் பகுதி கர்ப்பிணிப் பெண்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் என்று வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

## பூநகரி ப.நோ.கூ. சங்கம்

பதிவு இல:- பீ-ஏ-48, 12- 02- 1971 ஜெய்புரம்.
பல்லவராஜன்கட்டு.

சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்

அன்புடையீர் !


விசேட பொதுக் கூட்டம்

எமது சங்கத்தின் மேற்படி கூட்டம் 03- 10- 1992 மு. ப. 10-00 மணியளவில் தலைவர் கா கார்த்திகேசு அவர்கள் தலைமையில் ஜெயபுரம் அ. த. க பாடசாலையில் நடைபெறவுள்ளதால் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். இடம் பெயர்ந்த நிலை காரணமாக கூட்ட அறிவித்தல் கிடைக்கப் பெறாத பொதுச்சபை உறுப்பினர்கள் அறிவித்தலை பிரதம செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவு சேவையிலுள்ள
ந.பாலசுப்பிரமணியம்
செயலாளர்

(சி 5086)

## ஓராண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப். சனத்**

[செபஸ்ரியாம்பிள்ளை ஜெயசீலன் ராசா]

கட்டைக்காடு முள்ளியான்

உய்வு
25-10-1972

உதிர்வு
22-09-1991

# பிரேமாவை கொலை செய்ய எதிர்க்கட்சிகள் முயற்சியாம்

(கொழும்பு)

தன்னைப் படுகொலை செய்யத் தனது எதிரிகள் முயற்சிப்பதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அச்சம் தெரிவித்திருக்கிறார்.

தான் எத்தகைய விளைவுகளையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறினார். அரசின் பொருளாதாரக் கொள்கையினால் லஞ்சம். ஊழல்செய்ய முடியாத விரக்தியடைந்த சக்திகள் தனக்கு எதிராக இயங்குவதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 22

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் களுவாஞ்சிக்குடி சிறிலங்கா காவல் நிலையத் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

லெப். ராஜா (ராமலிங்கம் பரமதேவா - மட்டக்களப்பு)

ரவி (தம்பையா வாமதேவன் - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

1985 ஆம் ஆண்டு புல்லுமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

புல்லுமலைப் பிரதேசப் பொறுப்பாளர் -

ராஜேஸ் (இராசையா ஜெகநாதன் - கல்முனை - 02)

சிறிலங்கா காவற் படையினரால் கைதாகி, மட்டக்களப்பு காவல் நிலையத்தில் கொலை செய்யப்பட்ட

★ ஜேசு (பி. ஜேசுதாசன் - வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு யாழ். - இணுவில் வைத்தியசாலைக்கு முன்னால் தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

பொன்னுத்துரை கணேசமூர்த்தி (பாலவோடை, உடுவில் கிழக்கு, யாழ்)

1990 ஆம் ஆண்டு மண்டைதீவு முகாமிலிருந்து யாழ். கோட்டைப் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். சுமன் (முருகையா ஆனந்தன் - நல்லூர் குறுக்குவீதி, யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

சுதர்சன் (ஆறுமுகம் ஆனந்தராசா - கல்லூரிவீதி, இளவாலை, யாழ்.)

சத்தியன் (பெரியண்ணன் ஜெயராசா - அம்பன், குடத்தனை, யாழ்)

சவளக்கடைப் பகுதியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது சிறிலங்காப் படையினர் மற்றும் ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து தமிழ் விவசாயிகள்.

யாழ் குடாநாட்டில் சிறிலங்காப் படையினர் பரவலாக மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஓட்டுமடம், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதிகளில் கொல்லப்பட்ட நான்கு தமிழர்கள்

1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் காயமுற்று யாழ். மருத்துவமனையில் சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய -

மனோஜ் (கண்டுமணி அருள் - கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

மணலாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் [illegible] (சின்னத்துரை வசந்தகுமார் - உடுக்

(5092) (3206) நண்பர்கள்.

## தவறிவிட்டது

ந. ஜெயராசா வேலணை கிழக்கு வேலணை என்பவரது அடையாள அட்டை 11 9.92 அன்றிரவு கிளாலி ஆலங்கேணி இறங்கு துறைக்கும், நல்லூருக்கும் இடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் கரன் வர்த்தக நிலையம்இரணமடு சந்தி, கிளிநொச்சி. என்ற முகவரியில் அல்லது 'ஸ்கைலைன்ஸ்'' மணிக்கூட்டு வீதி. யாழ். என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (3207)

## அரச இலட்சினை பொறிக்க உத்தரவு

(கொழும்பு)

சிறிலங்கா அரசுக்கு சொந்தமான அனைத்து வாகனங்களிலும் அரசாங்க இலட்சினை பொறிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது. இது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் அரசாங்க இலட்சினை பொறிக்கப்படாத வாகனங்களை வைத்திருக்கும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ஒக்டோபர் ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம)

ஓய்வூதியக்காரருக்கான ஒக்டோபர் மாத வவுச்சர்கள், இரண்டாயிரம் தேசிய அடையாள அட்டைகள் என்பன நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

கொழும்பு சென்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பிய யாழ் அரச அதிபர்கா. மாணிக்கவாசகர் இவற்றைத் தம்முடன் எடுத்து வந்துள்ளார். (பா)

## ஆண்டு ஒன்று நினைவு



### லெப்டினன்ட் தம்பி


[பாலசுப்பிரமணியம் தேவராசா (கண்ணன்]

வீரஜனனம் 17-01-1971 — வீரச்சாவு 19-09-1991

மண்மீட்புப் பணிக்கு சென்றாய் - தம்பி
வீறுடன் பணி தொடர்ந்தாய்
மணலாறு முகாம் போரிலே
களம் குதித்தாய் - தம்பி
வருவாய் என நாமிருக்க
கொடியவர்கள் ஏவி விட்ட குண்டுக்கு
இரையானாயே தம்பி
இப்பிறப்பில் இனி உம்மைக்
காண்பது என்றோ தம்பி - கண்ணா

G. P. S. வீதி,
கல்வியங்காடு. (3256)

திருமதி. ஆ. நடராசா
குடும்பத்தினர்.



### 2-ம் லெப். சனத்

[செபஸ்ரியாம்பிள்ளை ஜெயசீலன் ராசா]

கட்டைக்காடு முள்ளியான்

உய்வு 25-10-1972 — உதிர்வு 22-09-1991

நீலக்கடலருகே நீங்காத பெருமையுடன்
நிலவுகின்ற நின்னூராம் கட்டைக்காட்டினிலே
கனிவான பெற்றோர்க்கும் சீர்மிதந்த உற்றார்
உறவினர்க்கும்
சீர்சிறப்புடன் விளங்கும் சென்மேரிஸ் கழகத்திற்கும்
நீலக்கடல் அள்ளித்தந்த முத்துக்களில் ஒன்றாம்
எம் ஜெயசீலன்

சிறப்புக்கிடமான சென்மேரிஸ் கழகத்திலே
சீரான கைப்பந்து தான்விரும்பும் கால்பந்து
திறமாக விளையாடி திறமைகளை வெளிக்காட்டி
சீரான கழகத்திலே சிறப்பான பெயரெடுத்தாய்

சிறப்புக்கள் கழகமதில் தொடர்ந்து வர - உன்
சிந்தனைகள் புலிப்பாசறையை நோக்கி ஓடிவிட
சிங்கத்தின் பிடியில் இருந்து தமிழ் மண்ணை மீட்க
சிறுத்தை எனப் புறப்பட்டான் ஜெயசீலன்

கூலிப்படை சிங்களவனை கூண்டோடு அழித்துவிட
புலிப்படை அணியோடு புறப்பட்டாய் மணலாறு-
ஈற்றில்
மணலாறு களத்தினிலே மார்பினில் குண்டேந்தி
மங்காப்புகளுடன் மாவீரனானாய் தமிழ் மண்
ணுக்காக

வீரமரணச் செய்தி கேட்டு
வீறுகொண்டெழுந்ததுவே கட்டைநகர்
விருப்புடன் நீர்வளர்த்தகழகமும்
வீறு கொண்டதுவே அந்நாளில்

ஓராண்டு சென்றதடா நீ மடிந்து —
ஓராயிரம் வடிவம் எடுக்கின்றன உன் செயல்கள்
உம் செயல்களை நாம்மொழிய
எண்ணூறு கவிதைகள் தான் படைத்தாலும்
ஈடாகுமா?

அஞ்சலி ... ... அஞ்சலி எம் வீரன்
மாவீரன் ஜெயசீலனுக்கு அஞ்சலி
புலிவீரர் வரிசையிலே மரணித்த வேங்கைகள்
மாவீரர் அனைவர்க்கும் எம் கழக அஞ்சலி

இவரின் ஆத்மா சாந்திக்காக பூசைத்தொடுவாய் புனித அன்னைவேளாங்கண்ணி ஆலயத்திலும் தாளையடி புனித அந்தோனியார்ஆலயத்திலும் இன்று(22-09-92)செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு திருப்பலி நடைபெறும் அத்திருப்பலியில் பங்குகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாளையடியில் அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்து உபசாரத்தில் போராளிகள் நண்பர்கள் உற்றார் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சென்மேரிஸ் கழகத்தினர்
கட்டைக்காடு. முள்ளியான்

(3257)

சுதர்சன் (ஆறுமுகம் ஆனந்தராசா - கல்லூரிவீதி, இளவாலை, யாழ்.)
சத்தியன் (பெரியண்ணன் ஜெயராசா - அம்பன், குடத்தனை, யாழ்)

சவளக்கடைப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது சிறிலங்காப் படையினர் மற்றும் ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து தமிழ் விவசாயிகள்.

யாழ் குடாநாட்டில் சிறிலங்காப் படையினர் பரவலாக மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஒட்டுமடம், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதிகளில் கொல்லப்பட்ட நான்கு தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் காயமுற்று யாழ். மருத்துவமனையில் சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய -

மனோஜ் (கண்டுமணி அருள் - கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

மணலாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் டனி (சின்னத்துரை வசந்தகுமார் - உடுத்துறை, தாளையடி, யாழ்.)
2-ம் லெப். சங்கீதா (வசந்தகுமாரி நடராசா நவாலி வடக்கு, மானிப்பாய் - யாழ்)
திவாகர் (மாணிக்கம் மகேஸ்வரன் துறைநீலாவணை மட்டக்களப்பு)
வினோத் (இராசையா யுவராஜா - வத்திராயன் வடக்கு, தாளையடி, யாழ்)
2 ம்லெப்.சனத் (செபஸ்தியாம்பிள்ளை ஜெயசீலன் கட்டைக்காடு, முள்ளியான், யாழ்.)
தர்மிலா (மாலா மயில்வாகனம் - ஆழியவளை தாளையடி - யாழ்.)
சுமங்கலி (மல்லிகா விஜயரட்ணம் சங்கத்தார்வயல், இயக்கச்சி - வவுனியா)
கப்டன் விக்ரம் (செல்லத்துரை உதயகுமார் - மிருசுவில் தெற்கு - யாழ்)
ரஜனி / ராஜினி (குயின்பத்மா தியாகராசா - 32, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம்)
ஜெனந்தினி (செல்வராணி விநாயகமூர்த்தி - 3 ஆம் வட்டாரம் முள்ளியவளை - முல்லைத்தீவு)
ரூபமதி (வசந்தி மகாலிங்கம் - விநாயகபுரம், முழங்காவில் - மன்னார்)
2-ம்லெப். நியூட்டன் (சோமசேகரம்-ராஜயோகம் நலன்பிரிவு நிலையம், ஓமந்தை - வவுனியா)
2-ம்லெப். சரத் (செபஸ்தியாம்பிள்ளை அற்புதராஜா - மணற்குடியிருப்பு -முல்லைத்தீவு)
நிமால் / வேங்கையன் (தங்கவேலு சிவானந்தன் நைனாமடு, நெடுங்கேணி - மணலாறு)
2-ம்லெப்.சுபீர் / இளங்குட்டுவன் (ஆனந்தராசா வினோந்திரராஜா - 154ஆம் கட்டை - கிளிநொச்சி)

மட்டக்களப்பு - கஞ்சிகுடியாறுப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

சுபாஸ் (விவேகானந்தன் விவேகரட்ணம் - கோமாரி அம்பாறை)
சிறி (கதிர்காமத்தம்பி ஆனந்தராசா இருதயபுரம் மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

### தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி/5085)


PHARMACY COURSE

வகுப்புகள் ஆரம்பம்: 05 - 10 - 92

விண்ணப்பங்கள் 30 -09 - 92 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விரிவுரையாளர்:-

டாக்டர் திருமதி ப. சர்வேஸ்வரன்

விபரங்களுக்கு:

ஸ்ரீ சத்யா

பொலி மெடிக்கல் கிளினிக் & பார்மஸி

இல 6/1, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாண. (சி- 5078)

### சிந்தனைக்கு

தவிர்க்க முடியாததுடன் தர்க்கம் செய்து பயனில்லை கிழக்குக் காற்றுகடுமையாக வீசும்போது மேலங்கியை அணிந்து கொள்வதைத்தவிர வாதமோ வழியோ வேறில்லை. ஜேம்ஸ் ரஸ்ஸல்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## தவிர்க்க முடியாத விளைவாக மாறும்

“சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளில் சர்வதேச சமூகம் முக்கிய கவனம் செலுத்தாமல் விட்டால் இந்த உலகம் பொருளாதார ரீதியில் வலுவற்ற நாநூறு சிறிய நாடுகளாகப் பிளவுபடுத்தப்படும்” என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்தார். மேலும், “யூக்கோ செலவோக்கியா பிளவு பட்டுள்ளமை அடுத்த நூற்றாண்டில் வேறு சில நாடுகளுக்கு முன்மாதிரியாக விளங்கக்கூடும்” எனவும் குறிப்பிட்டார்.

ஐ. நா. செயலாளரின் எச்சரிக்கை சர்வதேச சமூகத்திற்கு எனப் பொதுப்படையாக விடுக்கப்பட்டிருப்பினும், இதன் தார்ப்பரியத்தை சிறுபான்மை இனங்களின் உரிமைகளை மறுத்து. இராணுவ ரீதியில் அவர்களை ஒடுக்க முற்படும் சிறிலங்கா போன்ற அரசுகளும் தீவிர கவனத்திற் கொள்ள வேண்டியவையாகும்.

உலகில் கெடுபிடி யுத்தம் முடிவிற்கு வந்த வேளையில் மாபெரும் வல்லரசுகளில் ஒன்றாக இருந்த சோவியத் யூனியன் பதினைந்து நாடுகளாகச் சிதறியது மேலும், அங்குள்ள சில சிறிய தேசிய இனங்கள் தமது சுதந்திரத்துக்காகப் போராட தொடங்கியுள்ளன அதாவது, எழுபது ஆண்டு கால கம்யூனிச ஆட்சியில் தேசிய இனங்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியவில்லை.

இதேபோன்று இன்று சிதறிப் போயுள்ள யூக்கோ செலவோக்கியாவையும் கூறலாம். சோவியத் யூனியனில் இருந்த முக்கிய குடியரசான ரஷ்யக் குடியரசு சம்மதித்ததினால், இரத்தக்களரியின்றி சோவியத் யூனியன் கலைந்தது. ஆனால் யூக்கோசெலவோக்கியாவின் பிரதான குடியரசான சேர்பியா ஏனைய குடியரசுகள் பிரிந்து செல்வதை அனுமதிக்காததினால் இன்று பலத்த சண்டை அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேற்குலகம் யூக்கோசெலவோக்கியாவின் பிரிவினையை அங்கீகரிப்பதற்குத் தயாராகவுள்ளதால் அது சிதறுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஆனால், இப்பிரச்சினை தனியாக கம்யூனிச சித்தாந்தத்தை கடைப்பிடித்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மட்டும் தான் உருவாகியுள்ளதென்று கொள்ளக் கூடாது. மேற்குலகிலும் இனப் பிரச்

# விடியலைத் தேடிய தோழன் திலீபன்

(நேற்றைய தொடர்ச்சி)

நவாலி- யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு கிராமம். ஒருநாள் இயக்கத் தோழர்களைக் காணச் சென்றிருந்த திலீபன் நவாலி தெரு ஒன்றில் அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறான் ஒரு சிங்கள பொலிஸ் ஜீப் வண்டி உறுமிக் கொண்டே பக்கத்து வீதியால் திரும்புகின்றது பதற்றம் எதுவும் இன்றி ‘‘மெதுவாகக் கலைந்துசெல்லுங்கள்’’ என்று நண்பர்களிடம் சொல்கிறான் திலீபன். சூட்கேசும் கையுமாக எங்கோ பயணம் செய்கின்றவனைப் போல் பஸ் தரிப்பு நிலையத்தில் அவன் வந்து நின்றான். ஜீப் வண்டி வேகமாகப் பக்கம் வருகின்றது. துப்பாக்கி தாங்கிய பொலிஸ்காரர் ஜீப்பில் இருந்து தாவித் திலீபனை வளைத்துக் கொள்கிறார்கள். ‘போடாபோய்ஜீப்பில் ஏறு’ ஒருபொலிஸ்காரன் உறுமுகிறான். திலீபனுக்கு நிலைமை புரிகிறது. அவன் ஒரு கெரில்லாப் போராளி. நடுங்கிக்கொண்டே ஜீப் வண்டியை நோக்கி நடப்பவனைப் போல் பாசாங்கு செய்கிறான். திடீரென்று கையிலிருந்த சூட்கேசால் பக்கத்தில் நின்ற பொலிஸ்காரனை ஓங்கி அடிக்கிறான் திலீபன். மின்னல்வேக நிகழ்வுகள் சிங்களப் பொலிஸ்படையின் இயந்திரத் துப்பாக்கிகள் அதிர்ந்து முழங்குகின்றன ஆனால் திலீபன் அந்த நொடிப்பொழுதில் பக்கத்தில் இருந்த கடைகளுள் பாய்ந்து பின்புறமாகத் தப்பி விடுகிறான். அவனது இடது கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இரத்தம் பொங்கி வழிகிறது ... ஆம் குண்டுகளுக்கும் இரத்தத்திற்கும் நடுவில்தான் திலீபன் வாழ்ந்தான்.

திலீபனின் இலட்சிய வெறி 24 மணி நேர உழைப்பு, அசையாத வீரம், ஈடிணையற்ற போர் ஆற்றல், அரசியல் தெளிவு, மக்கள் நெஞ்சங்களைத் தொடும் திறன், இயக்கத்தைக் கட்டி வளர்க்கும் வல்லமை இவற்றால்தான் யாழ் மாவட்டத் தளபதி கிட்டு திலீபனை யாழ் மாவட்டத்திற்கு அரசியல் பொறுப்பாளர் ஆக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்திய கெரில்லாத் தாக்குதல்களின் விளைவு 1985இன் நடுப்பகுதியில் படைமுகாம்களை விட்டு வெளியே நகர முடியாத நிலை சிறிலங்காப் படைகளுக்கு ஏற்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச நிர்வாகம் முற்றாகச் செயலிழந்தது. இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் நிழல் அரசாங்கத்தை நிறுவுவதில் திலீபன் இரவு பகலாக உழைத்தான்

திலீபன் இந்தக் காலத்தில் பல அமைப்புகளை உருவாக்கினான் கிராம நீதிமன்றம் திலீபனால் உருவாக்கப்பட்டது தமிழீழத்தின் பழைமைவாத முதலாளித்துவ அமைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு நிவாரணம் பெற்றார்கள்.

தமிழீழப் பெண்கள் அரசியல் தெளிவு பெறவும், ஆயுதப் போராளிகளாக மாறவும் தமிழீழ விடுதலைப் போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவும் திலீபன் சுதந்திரப் பறவைகள்’ என்னும் மகளிர் அமைப்பை நிறுவினான். இந்த அமைப்பில் உருவாகிய பல பெண் விடுதலைப் புலிகளை இன்று களத்தில் பார்க்கிறோம்.



யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மாணவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ‘விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தை’ திலீபன் அமைத்தான். இந்த அமைப்பு பெரும் புயலாய் வீசிற்று. மாணவர்கள் தமிழீழ விடுதலைப் போரில் வெறிகொண்டு பாய்ந்தார்கள்.

கடல் தொழிலாளர் அமைப்பு - கலாசாரக் குழு - சீவல் தொழிலாளர் சங்கம் - கூலி விவசாயிகள் சங்கம் - அபிவிருத்திக் குழு - பத்திரிகையாளர் சங்கம் இவையெல்லாம் திலீபனால் நிறுவப்பட்டவை.

தமிழீழ மக்களைத் தொடர்பு கொள்ள ஒருசெய்திஏடு தேவை என்பதை உணர்ந்த திலீபன் ‘களத்தில்’ என்ற சூடான செய்தி ஏட்டை வெளியிட்டான். ‘ஷெல்’கள் விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும் இரவு நேரங்களில் அவன் களத்தில் ஏட்டுக்குச் செய்தி திரட்ட வீதிகளில் நடந்து கொண்டிருந்தான். தூக்கமே இல்லாத இரவுகள்... அவன் விழித்திருந்து எழுதிய எழுத்துக்கள் யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல வவுனியா, திருக்கோணமலை - மட்டக்களப்பு அம்பாறைஇங்கெல்லாம் இருந்த விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் அமுதமாயிற்று.

சமூக-பொருளாதார -கலாசார விடுதலையை பல்வேறு அமைப்புக்கள் ஏங்கள் போராட்டங்கள் மூலம் செயல்படுத்தி தமிழீழ மக்களின் முழுமையான விடுதலைக்கு திலீபன் வித்திட்டான்.

திலீபன் ஆடம்பரங்களை வெறுத்தான். சுகம் அவனுக்குத் தேவைப்படவில்லை கடைசிக் காலத்தில் அவன் கையில்இருந்தது ஒருசேட்டும் பாண்டும் மட்டுமே இரவு 12.00 மணிக்கு இரண்டையும் தோய்த்துப் போடுவான் காலை 5.00 மணிக்கு மீண்டும் அவற்றையே பாதி ஈரத்தோடு அணிந்து கொள்வான்.

திலீபன் இந்தியாவை நேசித்தான் இந்திய அரசின் ஒப்புதலோடு தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும் என்றுஉணர்வு பூர்வமாக நம்பியவன் அவன் 29.07.87 இல்ஏற்பட்ட ராஜீவ்-ஜெயவர்த்தனாஉடன் படிக்கையை சிறிலங்கா அரசு மீறிய போது இந்திய அரசிடம் நீதி கேட்டு ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்துத் திலீபன் சாகும் வரை உண்ணா விரதம் மேற்கொண்டான். ஆனால் இந்திய அரசின் மௌனமே திலீபனைப் பிணம் ஆக்கிற்று.

இந்தியா மீது தமிழீழ மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு இந்திய அரசு வைத்த நெருப்புத்தான் ‘திலீபன் மரணம்’

தமிழீழத்தைப் பொறுத்தவரை திலீபனின் மரணம் ஒரு புதிய எழுச்சியின் பிறப்பு ஆகியிருக்கிறது

ஒவ்வொரு நொடிப் பொழுதும் இனி அந்த மண்ணில் போர்முரசு முழங்கும்.

எத்தனை பெரிய வல்லமையையும் தமிழீழமக்கள் துணிச்சலோடு எதிர் கொள்வார்கள்.

அந்த மக்களுக்கு திலீபன் ஒரு புலி மட்டுமல்ல - திலீபன் ஒரு வழி.

நன்றி - தமிழீழம்.

# உறுதியாக வளர்ந்து வரும் கடற் புலிகள்
# வடக்கில் கடற்படைக்கு பெரும் அச்சுறுத்தல்

## சிறிலங்கா ராணுவ ஆய்வாளர்களின் கணிப்பீடு

கடந்த சில ஆண்டுகளில் கடற்புலிகள் அமைப்பின் செயற்பாடுகளால் அரசின் பாதுகாப்புப் படைகள் முடமாக்கப்படுவதும், கண்ணுக்கு புலப்படாத அச்சுறுத்தல் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. கடற்புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றிருப்பதும், அது பெருமளவில் வளர்ந்துள்ளதும், அரசாங்கப் படைகளின் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் பெரும் முட்டுக்கட்டை போடுவதாக உள்ளது கூட்டுப்படைகள் கரைக்

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் இருந்த இராணுவ முகாம்கள் மீளப் பெறப்பட்டமையானது கடற்புலிகள் துரித கதியில் வளர்வதற்கு உதவியுள்ளது. நம்பகரமான தகவல்களின்படி கடற்புலிகளின் ஆகக் கூடுதலானவசதிகள் வல்வெட்டித்துறைப் பகுதியிலேயே உண்டு.

இது தொடர்பாக நடந்த புலன் விசாரணைகளிலிருந்து கடற் புலிகளின் தற்கொலைப் பிரிவைச் சேர்ந்த இருவர் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட படகொன்றில் வந்து அதிகாலை இரண்டு மணியளவில் இக் கப்பலின் மீது மோதியதாக தெரிய வந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் சிறிலங்கா கடற்படையின் கப்பல் மீது மற்றுமொரு தாக்

சிங்கள மீனவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னிலையில் புலிகளால் விடுவிக்கப்பட்டதாக தெரிகிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் கடற்புலிகள் அமைப்பை பலப்படுத்துவதிலும், கட்டி வளர்ப்பதிலும் நம்பிக்கையோடு கவனம் எடுத்து வருவதாகச் செய்திகள்கூறுகின்றன. லண்டனிலும், பாரிசிலும் இருந்து வெளிவரும் புலிகள் அலு

குழு ஒன்றின் தலைவர் கூறுகிறார்.

யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவதற்கான கூட்டுப்படைகளின் தாக்குதல் நடத்தப்படுமானால் அதில் கடற்புலிகள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிலையை எடுத்து படையினருக்குச் சேதத்தை ஏற்படுத்துவர் என்று அரசுக்கு உதவும் தமிழ்க் குழுக்களின் செய

தொடங்கியுள்ளன. அதாவது, எழுபது ஆண்டு கால கம்யூனிச ஆட்சியில் தேசிய இனங்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியவில்லை.

இதேபோன்று இன்று சிதறிப் போயுள்ள யூக்கோ செலவோக்கியாவையும் கூறலாம். சோவியத் யூனியனில் இருந்த முக்கிய குடியரசான ரஷ்யக் குடியரசு சம்மதித்ததினால், இரத்தக்களரியின்றி சோவியத் யூனியன் கலைந்தது. ஆனால் யூக்கோசெலவோக்கியாவின் பிரதான குடியரசான சேர்பியா ஏனைய குடியரசுகள் பிரிந்து செல்வதை அனுமதிக்காததினால் இன்று பலத்த சண்டை அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேற்குலகம் யூக்கோசெலவோக்கியாவின் பிரிவினையை அங்கீகரிப்பதற்குத் தயாராகவுள்ளதால் அது சிதறுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஆனால், இப்பிரச்சினை தனியாக கம்யூனிச சித்தாந்தத்தை கடைப்பிடித்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மட்டும் தான் உருவாகியுள்ளதென்று கொள்ளக் கூடாது. மேற்குலகிலும் இனப் பிரச்சினை உண்டு. கனடாவிலுள்ள கியூபெக் மாநிலம் - பிரெஞ்சுமொழி பேசுபவர்களை அதிகம் கொண்டது. தமது சுய நிர்ணய உரிமையைக் கோரி நிற்கின்றது. இது குறித்து கியூபெக் தலைவர்களும் - கனடாத் தலைவர்களும் பேச்சு வார்த்தைகள் நடத்தி கியூபெக்கின் சுய நிர்ணய உரிமையை வலுப்படுத்தக்கூடிய முன்னேற்றகரமான முடிவிற்கு வந்துள்ளனர் பிரிட்டனிலும் ஸ்கொட்லாந்து தனது சுய நிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

இதேவேளை, மூன்றாம் உலக நாடுகளின் பல பாகங்களிலும், சிறுபான்மை தேசிய இனங்கள் தமது உரிமைக்காகப் போராட்டம் நடத்தி வருகின்றன. இதில் சில நாடுகளில் போராளிக் குழுக்கள் சில பிராந்தியங்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளன. சில அரசுகளுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தும் அளவிற்கு தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்களையும் நடத்தி வருகின்றன. அதாவது, பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டிய நிர்ப்பந்தங்களையும் உருவாக்கி வருகின்றன.

இந்நிலையில், ஐ. நா. தூதுவரின் எச்சரிக்கையானது வெறுமனே சும்மா மிரட்டலின் அடிப்படையில் எழுந்ததல்ல அண்மையில் வட அமெரிக்காவைச் சேர்ந்த அரசியல் மற்றும் உலக வரலாற்றுத் துறை நிபுணர்கள் ஆறுபேர் கூட்டாக வெளியிட்டுள்ள கணிப்பில் ''இன்னும் எட்டுவருடங்களில் - 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் வடபகுதியில் தமிழ் அரசு ஒன்று உருவாகிவிடும்" எனத் தெரிவித்துள்ளமையும் முற்றுமுழுதாக அவதானிப்பு எதுவுமின்றி கற்பனையில் வெளியிடப்பட்டது எனக் கூறிவிட முடியாதது. "திடுக்கிடும் இத்தீர்க்க தரிசனத்தை அப்படியே தூக்கி எறிந்துவிடுவது புத்திசாலித்தனமல்ல" என பிரபல சிங்கள அரசியல் விமர்சகர் மேர்வின் டீ.சில்வா குறிப்பிட்டுள்ளதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

அதாவது அண்மைக்காலத்தில் உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், ஏற்படப் போகும் என எதிர்வு கூறப்படும் மாற்றங்கள் குறித்தும் சிங்கள அரசு கவனத்திற் கொள்ளுதல் நல்லது அவ்வாறில்லாது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என எண்ணுமானால் ஐ. நா. செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலிகுறிப்பிட்டுள்ள எதிர்காலத்தில் உருவாகப் போகும்நாநூறு அரசுகளில் தமிழீழமும் ஒன்றாக இருப்பதை சிங்கள அரசால் தடுத்துவிட முடியாது.

# வடக்கில் கடற்படைக்கு பெரும் அச்சுறுத்தல்

## சிறிலங்கா ராணுவ ஆய்வாளர்களின் கணிப்பீடு

கடந்த சில ஆண்டுகளில் கடற்புலிகள் அமைப்பின் செயற்பாடுகளால் அரசின் பாதுகாப்புப் படைகள் முடமாக்கப்படுவதும், கண்ணுக்கு புலப்படாத அச்சுறுத்தல் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. கடற்புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றிருப்பதும், அது பெருமளவில் வளர்ந்துள்ளதும், அரசாங்கப் படைகளின் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் பெரும் முட்டுக்கட்டை போடுவதாக உள்ளது கூட்டுப்படைகள் தரைக் கட்டுப்பாட்டைப் பெறுவதற்காக போரிடும் வேளையில் அதன் வளங்களில் பெரும் பகுதியை கடற்புலிகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக திசை திருப்ப வேண்டியுள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பூமி அதிர்ச்சி இராணுவ நடவடிக்கை கூட மாதகல் பகுதியில் இருக்கும் கடற்புலிகளின் தளத்தைக் கைப்பற்றுவதையே நோக்காகக் கொண்டிருந்தது. ஆகஸ்ட் 8ஆம் திகதி கொட்பேகடுவ, விஜய விமலரட்ன போன்ற தளபதிகளின் மரணத்திற்குப் பின்னர் முழுக் கிழக்கு கடற்பரப்பிலும் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தாக்குதல் இதுவாகும்.

ஆனால் குறிப்பிட்ட இந்த நடவடிக்கை மூலம் கடற்புலிகள் வடக்கு, கிழக்கு பகுதியில் பலமிழந்து விடவில்லை என்றே பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். மாதகலில் கடற்புலிகளின் தளம் கைப்பற்றப்பட்ட சில நாட்களின் பின்னர் மண்டைதீவிலிருந்து படையினரின் முப்பது அடி நீளமான படகை புலிகள் துணிகர தாக்குதல் ஒன்றின் மூலம் எடுத்துச் சென்றனர்.

ஆகஸ்ட் 29இன் அதிகாலைப் பொழுதில் மண்டைதீவுப் பகுதியில் மேற்கொண்ட அதிரடி ஒன்றின் மூலம் உள்ளூரில் தயாரிக்கப்பட்டதும், நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்டதும், முப்பது அடி நீளமுமான கடற்படையினரின் படகு புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டது.

இதன்மூலம் மாதகல் கைப்பற்றப்பட்டபின்பு கடற்புலிகள் அமைப்பு அழிந்துவிட்டதாகவோ அல்லது சிறிலங்காப் படையினருக்கு குறிப்பாக கடற்படையினருக்கு எதிரான புலிகளின் தாக்கும் திறன் குறைந்து விட்டதாகவோ கருத முடியாது என்பது வெளிப்படையாகின்றது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் இருந்த இராணுவ முகாம்கள் மீளப் பெறப்பட்டமையானது கடற்புலிகள் துரித கதியில் வளர்வதற்கு உதவியுள்ளது. நம்பகரமான தகவல்களின்படி கடற்புலிகளின் ஆகக் கூடுதலானவசதிகள் வல்வெட்டித்துறைப் பகுதியிலேயே உண்டு.

மெதுவாகவும் ஆனால் உறுதியாகவும் வளரும் கடற்புலிகள் அமைப்பு கூட்டுப் படைகளின் செயற்பாட்டுக்கு குறிப் ாக வடபகுதியில் பெரும் அச்சுறுத்தலாக மாறும் என்று சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். கடந்த வருடத்தின் நடுப்பகுதியில்தான் சிறி

> கடற்புலிகள் ஒரு அதிகரிக்கும் அச்சுறுத்தல் என்னும் தலையங்கத்தின் கீழ் ஐலண்ட் வார இதழில் பத்திஎழுத்தாளரான சாமிந் திரபெர்டினன்டோ எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதி இது.

லங்கா கடற்படையினருக்கு எதிரான சில அதிரடித் தாக்குதல்களை கடற்புலிகள் நடத்தியிருந்தனர்.

சிறிலங்கா கடற்படையினரின் அபிதா என்றழைக்கப்படும் 3000—4000 தொன் எடையுள்ளதும், ரோந்துக் கட்டளைகளைப் பிறப்பிப்பதுமான தாய்க்கப்பலின் மீது 1991 மே மாதத்தின் முதல் வாரத்தில் கடற்புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல் அவர்களின் ஆற்றலைப் புலப்படுத்துவதாகும்.

இக் கப்பல் வேகமான தாக்குதல் படகுகளையும், பீரங்கிக் கப்பல்களையும் கட்டுப்படுத்தும் நோக்கில் பருத்தித்துறையிலிருந்து ஆறுமையில்தொலைவில் கடற்படையினரால் நிறுத்தப்பட்டிருந்தது. இந்தக் கப்பல் மீதான தாக்குதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டதுடன் இருபது பேர் வரையில் படுகாயமடைந்தனர். இவர்களில் சிலரதுநிலைமை கவலைக்கிடமாக இருந்தது.

இது தொடர்பாக நடந்த புலன் விசாரணைகளிலிருந்து கடற்புலிகளின் தற்கொலைப் பிரிவைச் சேர்ந்த இருவர் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட படகொன்றில் வந்து அதிகாலை இரண்டு மணியளவில் இக் கப்பலின் மீது மோதியதாக தெரிய வந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் சிறிலங்கா கடற்படையின் கப்பல் மீது மற்றுமொரு தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் கடந்த செப்டம்பரில் கடற்படைக் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தியது. ஒரு கரையோர ரோந்துப் படகு நயினாதீவிலிருந்து காரைநகர் கடற்படைத்தளம் நோக்கி வந்து கொண்டிருந்த போது தொடர்ச்சியான கடற்கண்ணிகளுக்குள் சிக்கிக்கொண்டது அந்த இடத்திலேயே இரு அதிகாரிகள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர். இந்தக் கண்ணியிலிருந்து தப்பியவர்களில் வடபகுதிக் கடற்படைகளின் கொமாண்டரான எச். ஆர் அடிரவீரவும் ஒருவர் ஆவார்.

அந்தக் கடற்படை படகில் பிரிகேடியர் விஜயவிமலரட்னாவும் மேலும் சில இராணுவ அதிகாரிகளும் பயணம் செய்வதாக போடப்பட்டிருந்த திட்டம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதால் அன்று அவர் தப்பிக்கொண்டார். இதனால் ஊர்காவற்றுறையில் கண்ணிவெடியில் சிக்கும்வரை அவர் உயிர்வாழ முடிந்தது.

புலிகளின் அறிக்கையொன்றின் படி வேகமாகச் செல்லக்கூடிய படகுகளை அவர்கள் பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது. கடற்படையினருக்கு அழிவு ஏற்படுத்துவது பற்றிய பயிற்சிகளில் புலிகள் தமது ஆட்களை உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் ஈடுபடுத்தியிருப்பதாக தெரியவருகிறது. இது படையினரின் கூட்டு நடவடிக்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும்.

கடற்புலிகள் வெளிநாடுகளிலிருந்து சில நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று வருவதாகச் சிலர் நம்புகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கும தகவல்களின்படி கடற்புலிகள் வட பகுதிக்கடலில் ரோந்து செய்வதாகவும் தெரிய வருகிறது. செய்திப்பத்திரிகையின் கட்டுரை ஒன்றிலிருந்து கடந்த யூலையில் மூன்று சிங்கள மீனவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னிலையில் புலிகளால் விடுவிக்கப்பட்டதாக தெரிகிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் கடற்புலிகள் அமைப்பை பலப்படுத்துவதிலும், கட்டிவளர்ப்பதிலும் நம்பிக்கையோடு கவனம் எடுத்து வருவதாகச் செய்திகள்கூறுகின்றன. லண்டனிலும், பாரிசிலும் இருந்து வெளிவரும் புலிகள் அலுவலகச் செய்திகளின்படி தலைவர் பிரபாகரன் கடற்புலிகள் அமைப்பை அதிக சக்தி வாய்ந்ததாக வளர்ப்பதற்கும், சிறிலங்கா அரசுக்கு கடற்பரப்பில் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டிருப்பதாக தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகள் நீண்ட காலதிற்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய வகையில் முன்னேறியிருப்பதாகவும் அதனால் உடனடியாக போரை நிறுத்துவது இலகுவானதல்ல என்றும் அரச படைகளோடு சேர்ந்து செயற்படும் தமிழ்க் குழு ஒன்றின் தலைவர் கூறுகிறார்.

யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவதற்கான கூட்டுப்படைகளின் தாக்குதல் நடத்தப்படுமானால் அதில் கடற்புலிகள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிலையை எடுத்து படையினருக்குச் சேதத்தை ஏற்படுத்துவர் என்று அரசுக்கு உதவும் தமிழ்க் குழுக்களின் செய்திகள் கூறுகின்றன. கடற்படையினருக்கு எதிராக நடத்தப்படும் திட்டமிட்ட தாக்குதல் மூலம் போரிடும் படையினரின் நடவடிக்கைகள், மற்றும் போர்க் களத்திலிருக்கும் டாங்கிகள், வாகனங்கள் உட்பட பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்றும் நம்பப்படுகிறது. வடபகுதி நடவடிக்கைகளின்போது இராணுவம் ஆட்களை அனுப்புவதற்கும், விநியோகத்திற்கும் பெருமளவில் கடற்படையினரையே சார்ந்திருக்க வேண்டும் என்பதைப் புலிகள் நன்கு அறிவர்.

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே

# கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்ட போட்டிகள்

(நமது நிருபர்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே கோட்ட மட்டத்தில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்றைய போட்டிகளின் விபரம் வருமாறு:

மருதனார்மடம் கோட்டத்தில். உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு 17வயது பிரிவில் மானிப்பாய் மெமோறியல் எதிர் உரும்பராய் இந்துக்கல்லூரி, மாலை 4.10 மணிக்கு 19வயது பிரிவில் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் மாலை 3.15 மணிக்கு 17 வயதுப் பிரிவில் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், மாலை 4.30 மணிக்கு 17வயது பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி.

தென்மராட்சிக் கோட்டத்தில், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் 17 வயதுப் பிரிவுகளில் பிற்பகல் 3.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு எதிர் மட்டுவில் மகாவித்தியாலயம், பிற்பகல் 4.00மணிக்கு விடத்தற்பளை வித்தியாலயம் எதிர் மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

## பணமாக ஆசிரியர் சம்பளம்

சகல ஆசிரியர்களினதும் புரட்டாதி மாதச் சம்பளம் பணமாகக் கொடுப்பதற்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மேற்தரக் கிளை நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே சகல பாடசாலை அதிபர்களும் வங்கியுடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

ஈழநாதம்

# களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை யாழ். அரச அதிபர் நேரில் சென்று சந்தித்தது தெரிந்ததே. இவர்களுள் ஒரு தொகுதியினரின் பெயர் விபரங்களை அவர் எடுத்து வந்துள்ளார். இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 25 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 18 பேரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 16 பேரும் அடங்குகின்றார்கள். இவர்களின் விபரங்கள் வருமாறு:-

குமாரசாமி சத்தியசீலன் உடுவில், யோன் போசன் இருதயநாதன் தாளையடி பசுபதி அமிர்தலிங்கம் தாவடி, ஆண்டி சூரியகுமார் புன்னாலைக் கட்டுவன், சின்னையா சிவராசா கொடிகாமம், செல்லையா நவரட்ணம் புலோலி, தம்பிராசா கஜேந்திரன் தேவரையாளி, கதிரன் சிவலிங்கம் கைதடி, அந்தோனிப்பிள்ளை யோர்ச்சாம்சன் குருநகர், செல்வராசா சிறீபாஸ்கரன் வரணி, கிருஷ்ணபிள்ளை சிவபாதம் யாழ்ப்பாணம், கந்தசாமி நாகமணி மாறன் கொடிகாமம், துரைராசா சிறீதரன் கொக்குவில், சுதாராசா சுகுமார் மானிப்பாய், சேனாதிராசா புனிதராசா நவாலி, வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் சுன்னாகம், முத்துக்குமார் பரமநாதன் சுன்னாகம், இரட்ணம் தேவராசா தாவடி, ஜோசப் பிரேமதாசா காங்கேசன்துறை, துரைரட்ணம் இராஜகுமார் கோப்பாய், செபமாலை இமானுவல் யாழ்ப்பாணம், பாலசிங்கம் பேரின்பம் நவாலி, குட்டியன் அப்புத்துரை, சண்டிலிப்பாய், நகுலர் சின்னத்தம்பி கைதடி, சிவராசா மோகனராசா தாவடி, பொன்னுத்துரை சிவராஜேஸ்வரன் கோப்பாய், காசிலிங்கம் படிகலிங்கம் வட்டக்கச்சி, கதிரன் கந்தையா, இராமநாதபுரம், வைரமுத்து சிவராசா முழங்காவில், சொக்கலிங்கம் மகாலிங்கம் கிளிநொச்சி, வைரமுத்து பஞ்சலிங்கம் கணேசபுரம், பெருமாள் குணரட்ணம் கிளிநொச்சி, சண்முகம் பாஸ்கரன் கிளிநொச்சி, பொன்னுச்சாமி புவிராஜரட்ணம் கிளிநொச்சி, குப்புசாமி குமாரவேல் கிளிநொச்சி சித்தம்பலம் சிவசுப்பிரமணியம் முரசுமோட்டை, சரவணமுத்து யோகரட்ணம் கனகாம்பிகைக்குளம், வேலுசபாலிங்கம் பல்லவராயன்கட்டு, இராமசாமி நடராசா கணேசபுரம், நாகராசா நரேந்திரன் ஜெயந்திநகர், ஞானப்பிரகாசம் லூர்துசாமி மாயவனூர், திருச்செல்வம் சுரேஸ் கிருஷ்ணபுரம், கதிர்காமத்தம்பி சிவராசா முரசுமோட்டை, செல்லையா குமாரசாமி, குமாரபுரம். செபஸ்தியன் டொன்பொஸ்கோ மன்னார், செபஸ்தியாம்பிள்ளை ஜெராட் ராஜேந்திரகுமார் பள்ளிமுனை, லேமிநாதன் சார்ல்ஸ் பிரான்சிஸ் பனங்கட்டிக்கொட்டு, பஸ்தியாம்பிள்ளை அமிர்தகுமார் பெரியகடை, அந்தோனி தற்குறூஸ் லெபன் தோட்டவெளி, மொனிபெஸ் தத்துவாஸ் பேசாலை, சந்தியாப்பிள்ளை பெலிடாஸ் பேசாலை, ராசேந்திரம் அந்தோனிப்பிள்ளை மிராண்டா பேசாலை, ஞானப்பிரகாசம் யோகானந் பேசாலை, சூசை அந்தோனி பெரியகடை, மரியதாஸ் தார்சிசியஸ் மடுதின் தலைமன்னார், மருசலீன் மனோகரன் தலைமன்னார், ராசரட்ணம் சந்திரசேகரன் சின்னக்கரிசல், ரன்வலகே தனிசன் குமார் பெர்னாண்டோ துரைப்பற்று, ஆண்டிப்பிள்ளை மயில்வாகனம் பேசாலை, பொன்னன் கோவிந்தராசன் மடு அகதி முகாம்.


## தேவை

எழுத்துக் கோர்ப்பதிலும், பக்கம் கட்டுவதிலும் அனுபவமுடையவர்களும், புத்தகம் கட்டுவதிலும், கட்டரிலும் அனுபவமுடையவர்களும் (ஆண்கள்) எமக்குத் தேவைப்படுகிறார்கள்.

குறைந்தது இருவருட அனுபவமுடையவர்கள் (23-9-92) புதன்கிழமை நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**மாறன் பதிப்பகம்,**
664, மருத்துவமனைச்சாலை,
யாழ்ப்பாணம்.

(சி-5083)


## மரண அறிவித்தல்கள்

## இரு தாக்குதல்

போது உலங்கு வானூர்தியொன்று ஐம்பது கலிபர் தாக்குதலை நடாத்திய வண்ணம் இருந்தது.

இதேவேளை இரண்டாவது தாக்குதல் சம்பவம் திருமலை மாவட்டத்தில் இடம் பெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது. இத்தாக்குதலில் நிலக்கண்ணி வெடியில் சிக்கி ட்றக் வண்டி சிதறியதென்றும் அதில் பயணம் செய்த ஒன்பது

# கடற்படையினர் சூடு இருமீனவர் பலி; ஒருவர் காயம்

கச்சாய்க் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இரு மீனவர்கள் கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலியாகியுள்ளனர் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5-45 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் இடம் பெயர்ந்து வந்து கெற்பலியில் வசித்து வந்த இராசையா சிவசோதி (வடலியடைப்பு. பண்டத்தரிப்பு), நாகேஸ் (கெற்பலி) என்னும் இருவருமே பலியானவர்களாவர்.

இவர்களின் உடல்கள் மீன் வலையினுள் சிக்கியிருப்பதால் மீட்கப்பட முடியாத நிலையிலுள்ளது.

இச்சம்பவத்தில் பொன்னுத்துரை ரஞ்சன் (கெற்பலி) என்பவர் காலில் சூட்டுக்காயங்களுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# புலிகளின் தலைவரை ஒப்படைக்க கோரலாம்

இவ்வருட இறுதியில் பங்களாதேசின் தலைநகரான டாக்காவில் நடைபெறவுள்ள 'சார்க்' உச்சி மாநாட்டில் விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனை தன்னிடம் ஒப்படைக்கும்படி இந்தியா கோரலாம் என தம்பகரமாகத் தெரியவருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்பொழுது 'சார்க்' நாடுகளின் செயலகம் அமைந்துள்ள காட்மண்டுவில் 'சார்க்' நாடுகளுக்கு இடையிலான நாடுகடத்தல் ஒப்பந்தத்தின் சட்ட நகல்கள் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் மேலும் இச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா இக்கோரிக்கையை விடுக்குமானால் சிறிலங்கா இது குறித்து தீவிரமாக சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியாவில்

தாக்குதல்களுக்கு அஞ்சி கடமையிலிருந்து தப்பி ஓடிவிட்டதாக பொலிசார் ஒப்புக்கொண்டுள்ளனர் என ராய்ட்டர் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது

## இந்திய

ஷரத்துக்கள்போன்று இணைப்புகளை முக்கியமானவைகளாக நான் கருதவில்லை என்று கூறிய ஜே. ஆர். இணைப்புகள் உடன்படிக்கையுடன் சேர்க்கப்பட வேண்டியவை என்றார் 1987முதல் இந்தியாவும். சிறிலங்காவும் இணைப்புகள் குறித்துப் பேசி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 45 J கோடி

கீழ் அபரிமிதமாகும் இந்த ஆயுதங்களை வார்சோ உடன்படிக்கை நாடொன்று ஐந்து வருட கடனுதவித் திட்டத்தின் கீழ் சிறிலங்காவிற்கு வழங்க இருப்பதாகவும் இதன் மொத்தப் பெறுமதி 450 கோடி ரூபா இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.


## பூநகரி ப. நோ. கூ. சங்கம்

பதிவு இல: பி. ஏ. 48, 12-02-1972

## ஜெயபுரம் பல்லவராயன்கட்டு

சகல உறுப்பினர்களுக்கும்

அன்புடையீர்!

### கிளைக்குழுத் தெரிவு—1992

எமது சங்கத்தின் மேற்படி தெரிவு தொடர்பாக நியமனப்பத்திரங்கள் 18-10-1992 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். போட்டி ஏற்படும் கிளைக் குழுக்களுக்கான தேர்தல் 24-10-1992 சனிக்கிழமை நடைபெறும்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த கிளைக்குழுக்களுக்கான நியமனப்பத்திரம் ஏற்றல் கீழ்தரப்படும் இடங்களில் நடைபெறும். ஏனைய


## திலீபன் எட்டாம் நாள் (22-9-1992)

ஈழமெங்கும் எழுச்சியுறு உண்ணா நோன்பில்
எம்மக்கள் ஈடுபட்டு உணர்வைத் தந்தார்;
ஆழக் கடல் . . . பாய் விரிக்கும் வல்வையிலே - ஐவர்
அன்புமகன் திலீபனுக்கு ஆதரவாய் நோன்பிருந்தார்;

மட்டுநகர் என்னும் மாண்புறு மண்ணில்-'மதன்' என்னும்
பட்டு முகங்கொண்டோன் பசி கிடந்தான்:
மொட்டவிழ்ந்து சிலிர்க்கின்ற முல்லை யூரில்
திட்டமுடன் திருச்செல்வம் தொடர்ந்து வந்தான்!

எரிமலையாய்க் குமுறும் திருமலையில் - 'கிருபா'
பெருநோன்பைப் பெருமையுடன் தொடங்கி விட்டான்!
அருகினிலே திலீபனுக்குத் துணையாய் இன்னும்
பெருமை தரப்பெண் மூவர் தொடர்ந்து வந்தார்!

கடல் ஒன்றுவந்து நல்லூரில் நின்று
கரை கண்டதோ? - மக்கள் அலை நின்றதோ? -அன்றேல்
உடல் தன்னில் ஓடும் தமிழென்னும் உணர்வு
மடை தன்னை மீறிப் புறப்பட்டதோ?

கவிஞர். மு. வே. யோ. வாஞ்சிநாதன்


## தொடரட்டும் போராட்டம்

வண்ணத் தமிழீழம் காண வேண்டும்
என்ற எண்ணம் மலர
உண்ணா நோன்பிருந்து உடலைவிட்டு
உன் உயிர்கழர
தொடரட்டும் போராட்டம் என்று
எம் எண்ணம் வளர
விரைவினில் தான்எங்கள் தமிழீழம் மிளிரும்
இவ்வண்ணம்

தியாகி திலீபனை நினைவு கூரும்,
சீமெந்துக் கட்டடத் தொழிலாளர் சங்கம்,
இல 10, ஐயனார் கோவில்வீதி, யாழ். மாவட்டம்.
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: நல்லூர், யாழ்ப்பாணம், உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கட்டடத் தொழிலாளர் யாழ். ஐயனார் கோவிலில் நடைபெறும் உண்ணாவிரதத்தில் புதன்கிழமை 23 09-92 இல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

(சி/5089)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 02 | 22 |
| — | — |
| 03 | 09 |
| — | — |
| 1973 | 1991 |

வதிலும் அனுபவமுடையவர்களும், புத்தகம் கட்டுவதிலும், கட்டரிலும் அனுபவமுடைய வர்களும் (ஆண்கள்) எமக்குத் தேவைப் படுகிறார்கள்.

குறைந்தது இருவருட அனுபவமுடையவர்கள் (23-9-92) புதன்கிழமை நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**மாறன் பதிப்பகம்,**
664, மருத்துவமனைச்சாலை,
யாழ்ப்பாணம்.

(சி-5083)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## நடராசா சிவபாக்கியம்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி நடராசா சிவபாக்கியம் அவர்கள் 20-09-92 அன்று காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற திரு. நடராசாவின் அன்பு மனைவியும், திரு. இராசேஸ்வரன் (N.R. கரவெட்டி), இராசகோபால் (இலங்கை வங்கி, நெல்லியடி), இராச லிங்கம் (சுவிஸ்), இராசரட்ணம் (L.O. பருத்தித்துறை), திருமதி இராசேஸ்வரி - ஸ்ரீராசபுலேந்திரன் (ஈகிள் பிறஸ் யாழ்ப்பாணம்), திருமதி இராசசுலோசனா - சிவகுருநாதன் (மாணவர் கலாசாலை கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-09-92 (நேற்று) அவரது இல்லத்தில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

'கிருஷ்ண வாசா'
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. [3262]

தகவல்:
இராசேஸ்வரன்
(மகன்)

## திருமதி
## செல்லையா தங்கம்மா

மண்கும்பானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 213 கஸ்தூரியார் வீதியில் (லலிதா மாளிகை) வசிப்பவருமாகிய செல்லையா தங்கம்மா காலமாகி விட்டார். அன்னார் காலம் சென்ற செல்லையாவின் அன்பு மனைவியாரும், காலம் சென்ற வீரசிங்கம், இந்திரசித்து (லலிதா நகைமாளிகை), தங்கமலர், சிவலிங்கம், சிவபாதலிங்கம் (செல்லையா சிவபாதலிங்கம் நகை மாளிகை) மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் நடராஜா (மைதிலி நகைமாளிகை) பூலோகநாதன் (ஸ்ரீகுமரன்ஸ் ரோர்ஸ், நாரம்பல) காலம் சென்ற நாகம்மா மகாலெட்சுமி, யோகேஸ்வரி, மகுடராணி, ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். பூதவுடல் இறுதிக் கிரியைக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று மாலை 3.00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
செல்லையா சிவபாதலிங்கம்
மகன்
(3260)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பெர்னாண்டோதுரைப்பற்று, ஆண்டிப்பிள்ளை மயில்வாகனம் பேசாலை, பொன்னன் கோவிந்தராசன் மடு அகதி முகாம்.

### இரு தாக்குதல்

போது உலங்கு வானூர்தி யொன்று ஐம்பது கலிபர் தாக்குதலை நடாத்திய வண்ணம் இருந்தது.

இதேவேளை இரண்டாவது தாக்குதல் சம்பவம் திருமலை மாவட்டத்தில் இடம் பெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது. இத்தாக்குதலில் நிலக்கண்ணி வெடியில் சிக்கி ட்றக் வண்டி சிதறியதென்றும் அதில் பயணம் செய்த ஒன்பது இராணுவத்தினர் ஸ்தலத்திலேயேகொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் இந்திய வானொலி மேலும் அறிவித்தது.

### தியாகி

கலவன் பாடசாலையும் சிரமதானமூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

கரவெட்டி வட்டப் பிரிவில் நெல்லியடி வர்த்தகர் சங்க ஆதரவில் வர்த்தகர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களால் நெல்லியடி பஸ்நிலையப்பகுதி துப்புரவு செய்யப்படவுள்ளது.

கொடிகாமம் வட்டப் பிரிவில் அப்பகுதி மக்களால் மிருசுவில் அரசினர் வைத்திய சாலை துப்புரவுசெய்யப்படும்.

### அரசின்

மழைக்காலத்திற்கு முன்பே தாக்குதல் நடத்த திட்டமிடப் படுவதாகவும், இதற்காக 20,000 படையினர் தயார் படுத்தப்படுவதாகவும் கூறப் பட்டுள்ளது. எனினும் இம் மாதம் முப்பதாம் திகதிக்கு பின்னர் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் வடபிராந்திய தளபதி ஜெரி டி சில்வாவின் இடத்திற்கான புதிய நியமனம் செய்யப்படாமை படையினர் நடவடிக்கையை தாமதமாக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. தற்போதைய யாழ்ப்பாண பிரிகேடியர் தளுவத்த பதவி உயர்த்தப்படலாம் என்றும் கருதப்படுகிறது.

## ஜெயபுரம்
## பல்லவராயன்கட்டு

சகல உறுப்பினர்களுக்கும்

அன்புடையீர்!

### கிளைக்குழுத் தெரிவு—1992

எமது சங்கத்தின் மேற்படி தெரிவு தொடர்பாக நியமனப்பத்திரங்கள் 18-10-1992 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணி தொட்க்கம் 11.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். போட்டி ஏற்படும் கிளைக் குழுக்களுக்கான தேர்தல் 24-10-1992 சனிக்கிழமை நடைபெறும்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த கிளைக்குழுக்களுக்கான நியமனப்பத்திரம் ஏற்றல் கீழ்தரப்படும் இடங்களில் நடை பெறும். ஏனைய கிளைக் குழுக்களுக்கான நியமனப்பத்திரம் ஏற்றல் அவ் வக்கிளை நிலையங்களில் நடைபெறும். போட்டிஏற்படும். பட்சத்தில் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொண்ட அதே இடங்களில் தேர்தல் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

| கிளைக்குழு | கிளைக்குழு இல. | நடைபெறும் இடம் |
|---|---|---|
| மட்டுவில் நாடு | 01 | சர்வோதயக் காரியாலயம் ஜெயபுரம் |
| வில்லடி | 02 | ஜெயபுரம் கிளை II |
| ஞானி மடம் | 03 | ஜெயபுரம் மக்கள் கடை |
| செட்டிய குறிச்சி | 04 | பிரதம செயலகம் ப. நோ. கூ. சங்கம் ஜெயபுரம் |
| கறுக்காய்த்தீவு | 05 | செம்பன்குன்றுக் கிளை |
| தம்பிராய் | 06 | தம்பிராய்க் கிளை |
| கௌதாரி முனை | 09 | மக்கள் கடை III நாச்சிக்குடாச் சந்தி |
| இரணை தீவு | 14 | புனித யாகப்பர் தேவாலயம், நாச்சிக்குடா |
| வினாசியோடை | 17 | கமநலசேவை நிலையம் முழங்காவில் |

கூட்டுறவுச் சேவையிலுள்ள
ந. பாலசுப்பிரமணியம்
செயலாளர்

(சி5087)

(சி/5089)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்
02 — 03 — 1973



வீரச்சாவு
22 — 09 — 1991

## வீரவேங்கை தர்மிலா
[மயில்வாகனம் மாலா]

மணலாற்றில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

களத்தினில் சமராடி
காலத்தால் அழிந்திடா
காவியம் படைத்திட்ட
காவிய நாயகியே
காலமெல்லாம் நின்புகழ்
காவியமாய் நிலைக்கட்டும்

07-10-1992 அன்று ஓராண்டு கிரியை வைபவத்தில் போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடமராட்சி கிழக்கு,
ஆழியவளை. (3258)

—குடும்பத்தினர்

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 21-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5752

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

24-9938, 27-5197, 24-207, 26-8674, 24-964, 27-5482, 24-9137, 42-2043, 27-4435, 42-728, 40-3073, 27-5822, 24-6811, 24-5454, 24-1983, 42-6119 40-2394, 42-1325, 24-6480, 26-825, 40-7541, 26-3118, 22-4766, 26-9158, 27-9626, 21-1685

## "நாம் விழிப்புடன் செயற்படுவோம்
## தியாகி திலீபனின் ஆவலை நிறைவேற்றுவோம்"

**மலரட்டும் தமிழீழம். கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், யாழ்ப்பாணம்.**

சி/5088